**O.S.No.05/2017**

***நாள்: 11.07.2023***
***லட்சுமணன் த.பெ. வெங்கட்டன்***
***சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1-ன் குறுக்கு விசாரணை***

*1. பிரதிவாதிகள் மீது வழக்கு தொடுத்துள்ள வழக்கின் சர்வே எண் எனக்கு தெரியாது.*
*2. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியாது.*
*3. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வாழை மரம் நட்டேன் அதில் காட்டெருமை சேதப்படுத்தியதால் குழி தோண்டினேன்.*
*4. பிரதிவாதிகள் எனது சொத்தில் வந்து வழக்கு சொத்து அவருக்கு உரிமையானது என்று எக்காலத்திலும் கோரவில்லை என்றால் சரிதான்.*
*5. பிரதிவாதிகளுக்கு என் இடத்தில் வடக்கும் பக்கமும் கிழக்கு பக்கமும் நிலமுள்ளது.*
*6. பிரதிவாதிகள் அவர்கள் நிலத்தில் கிழமேலாகவும் தென்வடலாகவும் சுமார் 22 தென்னை மரங்கள் இருக்கும்.*
*7. தென்னை மரத்திற்கு ஓரத்தில் தான் வடபக்கமும் கிழக்கு பக்கமும் என் நிலத்தின் உள் குழி தோண்டியுள்ளேன்.*
*8. நான் பிரதிவாதிகள் இடத்தில் 150 அடி ஆக்கிரமிப்பு செய்து குழி தோண்டியுள்ளேன் என்றால் சரியல்ல.*
*9. நான் பிரதிவாதியை அழைக்கழிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தான் தென்னை மரங்களை வெட்டி குழி தோண்யுள்ளேன் என்றால் சரியல்ல.*
*10. என் நிலத்தில் மேற்கு பகுதியும் தெற்கு பகுதியும் என் அண்ணனிடம் உள்ளது அந்த இடத்தில் குழி தோண்டவில்லை.*
*11. பிரதிவாதிகள் என் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும் என் அனுபவத்தை தடை செய்யவில்லை என்றும் நான் தான் பிரதிவாதிகள் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.*

*12*. பிரதிவாதியின் தென்னை மரங்களை காய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் குழி தோண்டியுள்ளேன் என்றால் சரியல்ல.
*13*. வழக்கு மூலம் இல்லாமல் நான் தாக்கல் செய்துள்ளதால் செலவுத்தொகையுடன் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.